டிரினிடி மகளிர் கல்லூரி, நாமக்கல் - 637002.

தமிழாய்வுத்துறை

# தொல்காப்பியம் - பொருளதிகாரம்

தாள் குறியீடு : 21PTA10

## தலைப்பு : மெய்ப்பாட்டியல்


<u>தயாரிப்பு:</u>

முனைவர் பா.விஷ்ணுபிரியா,

உதவிப்பேராசிரியர்

டிரினிடி மகளிர் கல்லரி, நாமக்கல்

http://www.trinitycollegenkl.edu.in/

# மெய்ப்பாட்டியல்

மெய்ப்பாடு விளக்கம்:

அகம்இ புறம் என்னும் ஒழுனலாறுகளைப் பின்பற்றி நடப்பது மக்கள் சமுதாயம். மக்களுடக் கலந்து பழகும் நிலையில் அவரவரின் சூழலுக்கு ஏற்ப உள்ளத்தில் பல குறிப்புகள் தோன்றும்.அக்குறிப்புகளுக்கு ஏற்ற செயல்பாடுகள் உடம்பில் தோன்றும்.இதுவே மெய்ப்பாடு என்று கூறப்படும்.

சுவையும் சுவைக்குறிப்பும்

பண்ணைத் தோன்றிய எண்நான்கு பொருளும்
கண்ணிய புறனே நால்நான்கு என்ப.

விளக்கம்:

விளையாட்டு ஆயத்தில் தோன்றுபவை முப்பததிரண்டு பொருள்களாகம்.அப்பொருள்கள் குறித்துப் புறத்தே நிகழும் பொருள் பதினாறாகப் பொருந்திவரும் என்று சொல்லுவர் புலவர்.

நகை, அழுகை, இளிவரல் , மருட்கை ,அச்சம் , பெருமிதம் , வெகுளி , உவகை என்கின்ற எட்டும் மெய்ப்பாடுகளாகும்.

## எண்வகை மெய்ப்பாடுகளின் -வேறுபெயர்கள்:

வியப்பு - அற்புதம்

காமம் - சிருங்காரம்

அவலம் - கருணை

உருத்திரம் - வெகுளி

நடுநிலைமை – மத்திமம்-சாந்தம் எனினும் ஒக்கும்.

மெய்ப்பாடு எட்டாதல்:

நால்இரண்டு ஆகும் பாலுமார் உண்டே.

மேற்கூறப்பட்டவை சுவையும் சுவைக்குறிப்பும் ஆகும். அவற்றைச்சுவையுள் அடக்கி எட்டாக வகுத்துக் கூறும் இடமும் உண்டு.

மெய்ப்பாடு பெயர்கள் (8)

நகை அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்று அப்பால்
எட்டாம் மெய்ப்பாடு என்ப.

விளக்கம்:

1.நகை 2.அழுகை 3.இளிவரல் 4.மருட்கை 5அச்சம ் 6. பெருமிதம் 7.வெகுளி 8.உவகை எனப் பகுத்துக் கூறப்பட்ட அப்பாகுபாடுகள் எட்டு.அவற்றை மெய்ப்பாடு என்று சொல்லுவர் புலவர்.

விளக்கம்:

மெய்ப்பாடு என்பது உடம்பில் தோன்றுகின்ற வேறுபாடாகும். நடிப்பவனின் மனஉணர்வுகள் அப்படியே காண்பவனுக்கும் ஏற்படுவதே மெய்ப்பாடு என்று செயிற்றியனார் விளக்கம் தருகிறார்.

# நன்றி

http://www.trinitycollegenkl.edu.in/